2020 மார்ச் 23]

நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற கம்பம் சட்டமன்றத் தொகுதியானது தேனி மாவட்டத்தில் இருக்கிறது. தேனி மாவட்டத்தில் ஏற்கெனவே மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், மூன்று அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் அங்கு இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, மாணாக்கர்களின் சேர்க்கை விகிதத்தைப் பொறுத்து, எதிர்வரும் காலக்கட்டங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேருவதற்கு மாணாக்கர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கூடுதலாக பெறப்பட்டால் அதுகுறித்து அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 162, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. நாராயணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

162—

கால்நடை மருத்துவமனை

***62729—திரு. வெ. நாராயணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், திடியூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், திடியூர் ஊராட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாக கால்நடை மருத்துவமனையைத் துவக்கக் கோரியுள்ளார்கள். அரசு விதிமுறைகளின்படி முதலில் கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்கப்பட்டு, பின்பு கால்நடை மருந்தகமாகவும், அதற்குப் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்பட வேண்டும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க குறைந்தது 3,000 கால்நடை அலகுகள் இருத்தல் வேண்டும். திடியூர் ஊராட்சி மற்றும் அருகிலுள்ள கிராமங்களான, மேலத் திடியூர், கீழ் ஓமநல்லூர் ஆகிய கிராமங்களையும் சேர்த்து, அப்பகுதியில் 1,623 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திடியூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. நாராயணன் அவர்கள்.

திரு. வெ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி.'

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன்.

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்.'

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

'காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.'

'கேட்டதைக் கொடுப்பவனே கிருஷ்ணா, கிருஷ்ணா'

2020 மார்ச் 23]

கேளாததையும் கொடுப்பவரான எங்களுடைய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களையும் வணங்குகிறேன்.

நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி மிகவும் ஏழை விவசாயப் பெருங்குடி மக்கள் வசிக்கின்ற பகுதியாகும். நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், திடியூர் ஊராட்சியில்தான் பச்சையாறு dam இருக்கிறது. அங்கே வசிக்கின்ற மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்கின்றார்கள். அதுபோல, அப்பகுதியில் கால்நடைகளை வளர்க்கின்ற மக்கள் அதிகப்படியாக வசிக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள், கிருஷ்ணனுடைய பெயரைத் தன்னுடைய பெயரில் தாங்கியிருக்கின்றவர். ஆகையால்

“பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் உங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உமக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்.”

என்ற திருப்பாவையின் வரிகளுக்கேற்ப கிருஷ்ணனோடு இருந்த ஆடு மேய்ப்பவர் குலத்தைச் சார்ந்த மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதியாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் இல்லையென்று சொல்லும் மனம் இல்லாமல் திடியூர் கிராமத்தில் கால்நடை மருந்தகத்தை அமைத்துத் தர வேண்டுமென்ற பணிவான கோரிக்கையை வைக்கின்றேன்.

முற்பகல் 11–05

மேலும், என்னுடைய நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்கு பாரிவள்ளல் பரம்பரையில் வாரிசுகளாக வந்த மாண்புமிகு இதய தெய்வம், எங்கள் பாசத்திற்கும் போற்றுதலுக்கும் உரிய அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுக்கும், 131 கோடி ரூபாயை அறிவித்து, நாங்குநேரி மக்களுடைய குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கிய எழுச்சி நாயகன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை

அமைச்சர் அண்ணன் திரு. வேலுமணி அவர்களுக்கும், அச்சாறு அணைக்கட்டுத் திட்டம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டது. அந்த உடைந்த அணைக்கட்டை மீட்டுக்கொடுப்பதற்கு 10 கோடி ரூபாயை ஒதுக்கி, அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுடைய நெஞ்சிலே பால்வார்த்த இதய தெய்வத்தின் அரசியல் வாரிசு, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் எங்களுடைய மாவட்ட அமைச்சர் மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர், அண்ணன் ஓ.பி.எஸ் அவர்களுக்கும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்தக் கோரிக்கையை நிறைவேற்றியதற்கு என் தொகுதி மக்களுடைய சார்பாக, மீண்டும் ஒரு முறை நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அண்ணன் அவர்கள் இந்தக் கால்நடை மருந்தகத்தை அமைத்துத் தருமாறு மீண்டும் ஒரு முறை பணிந்து வேண்டி வணங்கி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதியில் சுமார் 35,000 மாட்டு இனங்கள், 63,000 ஆட்டு இனங்கள் மற்றும் 3 இலட்சம் கோழி இனங்கள் உள்ளன. இவற்றிற்கு மருத்துவம் மற்றும் இனப் பெருக்க சேவைகள் வழங்கிட 16 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 1 கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் திடியூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் ஒன்றை அமைப்பதற்காக, திருப்பாவை பாடலைச் சொல்லி என்னிடத்தில் கேட்டிருக்கின்றார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த திடியூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. நாராயணன் அவர்கள்.

2020 மார்ச் 23]

திரு. வெ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சொலல்வல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது”

என்ற குறளுக்கேற்ப இந்த அவையில், யார் எதைக் கேட்டாலும், தன்னுடைய ஆளுமைத் திறனால், எதிரிகளுக்கு ஒரு சிம்மசொப்பனமாய் விளங்கிவருகின்ற அருமை அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுக்கும், அருமை அண்ணன் மாண்புமிகு ஓ.பி.எஸ். அவர்களுக்கும், பரிசீலனை செய்து தருவேன் என்று சொல்லியிருக்கின்ற மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கும்,

“யதுகுல காம்போதி நாடென்பதால்
யாதவ குழலோசை எதைச் சேர்ந்தது”

என்று மகா கிருஷ்ணன் பாடியிருக்கின்றார். அந்தக் குரலுக்கேற்ற பெயரோடு இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களை வாழ்த்தி வணங்கி அமர்கின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. P. சின்னப்பன் அவர்கள்.

திரு. P. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அண்ணன் திரு. கடம்பூர் ராஜு அவர்களையும் வணங்குகிறேன்.

விளாத்திகுளம் தொகுதி, என். வேடப்பட்டி கிராமத்தில், 3,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அந்தப் பகுதி மக்கள் அனைவருமே கால்நடைகளை நம்பித்தான் வசித்து வருகின்றனர். அந்தக் கிராமத்தில், ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட என். வேடப்பட்டியில், 3,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே அந்தப் பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு செய்தித் துறை மற்றும் அம்மாவட்டத்தின் அமைச்சர் அவர்களும் கோரியுள்ளார்கள். எனவே, வேடப்பட்டி ஊராட்சியில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கைக்கேற்ப, கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 163, மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அமைச்சர் அவர்கள்.

163—

மகப்பேறு மருத்துவமனை

***57023—திரு. R.D. சேகர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதியில் அனைத்து வசதிகளுடன்கூடிய மகப்பேறு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலிருக்கக்கூடிய மகப்பேறு சிகிச்சை மையம், சென்னையில் பல்வேறு வசதிகளை உள்ளடக்கிய எழும்பூர் அரசு தாய்–சேய் மருத்துவமனை 1,025 படுக்கைகளோடும், திருவல்லிக்கேணி கஸ்தூரிபாய் காந்தி அரசு தாய்–சேய் மருத்துவமனை 695 படுக்கைக